[1970 மார்ச் 23

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் யார் யாருக்குச் சொந்தமான நிலத்தில் இப்படிப்பட்ட கிணறுகள் தோண்டப்பட்டுத் தண்ணீர் விரயம் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதுபற்றிய குறிப்புக்கள் தரப்பட்டால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வெட்டப்படுவதற்கு முன்பு பீரிட்டு வரும் நீரூற்றுக்கள் இருந்தன. நிலக்கரிச் சுரங்கங்கள் வெட்டியதற்குப் பிறகு அந்தப் பீரிட்டு வரும் நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் வரவில்லை . . .

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) மூல வினாவில் கேட்கப்பட்ட பொருளை விட்டு வேறு பொருள் குறித்து துணை வினா கேட்டது குறித்து.

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில், குறிப்பிட்ட ஒரு ஜில்லா பற்றிய விவரங்கள் கோரப்பட்டிருந்தால், அந்த ஜில்லாவைப் பற்றித்தான் துணைக் கேள்வி போடவேண்டும் என்றுதான் பல முறை இந்த அவையில் தாங்கள் கூறியிருக்கிறீர்கள். மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தை பற்றிச் சொல்லுகிறார்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கொஞ்சம் நுணுக்கமாகப் படிக்க வேண்டும்.

"தஞ்சை மாவட்டத்தில் தானாகப் பீரிடும் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது உண்மையா?

தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ?"

என்று மூலக் கேள்வி அமைந்திருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விடை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவையின் நிகழ்ச்சியைக் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று தாலுக்காக்களை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், மற்ற நான்கு தாலுக்காக்கள் கல்தரையாக இருப்பதால், அங்கு நீரூற்றுக்கள் 'போர்' செய்ய முடியவில்லை. அதற்கு ஏதாவது பிரத்தியேக சலுகை தந்து, கற்களை உடைத்து நீரூற்றுக்களைக் கண்டுபிடிக்க ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?.